# சுதந்திரன்


SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 தை 5, மார்ச் 15 (18 1-76) ஞாயிறு புத்தகம் 29, இதழ் 27


## வள்ளுவர் ஆண்டு 2007 ஆரம்பமாகியது!

தை முதல் நாளுடன் திருவள்ளுவர் ஆண்டு 2007 ஆரம்பமாகிவிட்டது. தமிழ்ப் பெரும் தலைவராம் வள்ளுவர் நினைவாக ரூபா 50 இலட்சம் செலவில் சென்னையில் தி.மு.க. அரசினால் அமைக்கப்பட்டு வரும் வள்ளுவர் 'கோட்டம்' வேலைகள் முடிவடையும் தறுவாயிலுள்ளன. எதிர்வரும் பெப்ரவரி 8ம் நாள் இது திறந்துவைக்கப்படவிருக்கிறது.



சனவரி 10 — தமிழ்த் தியாகிகள் நினைவுச் சின்னத்துக்கு அஞ்சலி செலுத்துவதற்காக செல்லும் மௌன ஊர்வலத்தையும் நினைவுச் சின்னத்துக்கு மூதறிஞர் செல்வா மலர் தூவி அஞ்சலி செலுத்துவதையும், இறந்த தியாகிகளின் பெயரால் சைவ மதக் கிரியைகள் நடைபெறுவதையும் படத்தில் காணலாம்.

# அரசிடம் தகவல் கோருகிறது

# 'அம்னெஸ்டி இன்டர்நேஷனல்'


## சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களைப் பற்றி

சிங்கள நாட்டுச் சிறைச்சாலைகளில் விசாரணையேதுமின்றித் தடுப்புக் காவல் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் தமிழ் ஈழத்து இளைஞர்களைப்பற்றி அனைத்துலக நிறுவனமான 'அம்னெஸ்டி இன்டர் நாஷனல்' இப்போது அதிக கவனமெடுத்து வருகிறது. தமிழ இளைஞர்களைச் சிறையில் விசாரணையின்றி வைத்திருப்பதற்கான காரணத்தை கூறும்படி அந்த நிறுவனம் அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இப்போது கண்டி போகம்பரைச் சிறைச்சாலையிலிருக்கும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் சகோதரரான சிவஜெயத்தைப் பற்றிய தகவல்களைத் தருமாறு அது இரண்டுவாரங்களுக்கு முன் நீதிய மைச்சுக்கு எழுதியிருப்பதாக அறியப்படுகிறது.

அரசாங்கத்திடம்நேரடியாகத் தகவல் பெறுவதற்கு இந்த நிறுவனம் முயற்சிக்கும் அதே வேளையில் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் பெற்றோருக்கும், உற்றார் உறவினருக்கும் நேரடியாக எழுதி அவர்கள் மூலமாகவும் தகவல்திரட்டி வருகிறது. சிறையிலிருக்கும்செல்வன் பூ. நடேசானந்தத்தைப் பற்றிய தகவல் கோரி அவருடைய பெற்றோருக்கும் அண்மையில் ஒரு கடிதத்தை சுவீடனிலிருந்து இந்நிறுவனத்தின் உறுப்பினர்கள் எழுதியிருந்தனர்.

காசி ஆனந்தனைப்பற்றி இந்த நிறுவனம் விபரம்

5—ம் பக்கம் பார்க்க



## பொலிசாரின் துப்பாக்கியைக் கண்டும் மிரளவில்லை 6 வயது தமிழ்ச் சிறுமி!

### ஊர்வலத்தின் போது நடந்த உணர்ச்சி மிகு சம்பவம்!

சனவரி 10ம் நாள் தமிழ் மாநாட்டுத் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக தமிழர் கூட்டணித் தலைமைச் செயலகத்திலிருந்து கைகளில் மலர்களுடன் பெண்களும், ஆண்களும், தலைவர்களுமாக நினைவுச் சின்னம் நோக்கி ஊர்வலமாகச் சென்றபோது, இடை வழியில் குறுக்கிட்ட ஆயுதம் தாங்கிய பொலிசார் ஊர்வலத்தைத் தடுத்தனர். அப்போது ஊர்வலத்தின் முன்னணியில் சென்ற ஆறுவயதுத் தமிழ்ச் சிறுமியொருத்தி பொலிசார் கையில் வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கியைக் கண்டு கொஞ்சம்கூடக் கலக்கமின்றி கலகலவென்று சிரித்தகாட்சி அனைவரையும்மெய்சிலிர்க்கவைத்தது.

துப்பாக்கிக்கும் அஞ்சாது சிரித்து நின்ற இந்த வீரச் சிறுமி வேறுயாருமல்ல—திரு. ஈழவேந்தனின் மகள் எழிலினி தான் அவள். ஆம் புலிக்குப் பிறந்ததுபூனையாகுமா?

பிரதான வீதிவழியாக ஊர்வலம் சென்று கொண்டிருந்த போது, திடீரென இடையில் குறுக்கிட்ட பொலிசார் ஊர்வலம் நடத்துவது அவசரகாலச் சட்டத்துக்கு முரணானதென்றும் ஊர்வலத்தினரைக் கலைந்து போகும்படியும் கூறினர். இச்சமயத்தில் நாவலர் அமிர்தலிங்கமும், மு. சிவசிதம்பரமும் முன்வந்து தாம் சட்ட மறுப்பு ஊர்வலம் நடத்தவில்லையென்றும் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தவேமௌனமாகசெல்வதாகவும், அப்படிச் செல்ல அனுமதிக்காவிடின் அந்த இடத்திலேயே உட்கார நேருமென்றும் பொலிசாரிடம் தெரிவித்தனர். இதையடுத்து பொலிசார் வேறு வழியின்றி ஊர்வலத்தினரை இருவர் இருவராகச் செல்ல

— 5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத் தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# பிலிப்பைன் பெற்றெடுத்த வேங்கை!



நெடி துயர்ந்த மதிற் சுவரால் அரண் செய்யப் பட்ட கோட்டையது ஆம்! அது தான் 'சண்டியாகோ'' கோட்டை 1896ப் ஆண்டு 'டிசம்பர்' திங்கள் 3ம் நாள் பிலிப்பைன்ஸ் வரலாற்றில் மறக்க முடியாத நாள்! அக் கோட்டையின் முன் மக்கள் வெள்ளம் முட்டி மோதிய நாள்!!

ஆனால்...!!!

இன்பம் இழையோடும் முகத்தினராய் யாரையுமே காணோம். கண்கள் குளமாக நின்றனர் சிலர். ஆத்திரத்தை அடக்க முடியாதவர்கள், "ஆதிக்க வெறி ஒழிக" 'எம் ஒப்பற்ற தலைவன் ரிசல் வாழ்க' என முழங்கினர். கூட்டம் வெள்ளமாய்—கடலாய்—சமுத்திரமாக மாறுவதுகண்டு, குண்டாந்தடி தாங்கிய போலிசார் அவர்களை விலகிச் செல்லப் பகீரதப் பிரயத்தனம், எடுத்தனர்.

எதையும் தாங்கும் இதயம் கொண்ட மக்கள் எழுச்சியை குண்டாந்தடியினால் என்ன செய்ய முடியும்?

இன்பத் தலைவனை—இதய தெய்வத்தைத் தரிசிக்கத் துடித்து நின்ற அம் மக்கள் கூட்டத்தை, அடக்கு முறை ஆட்சியின் ஏவல் நாய்களாம் பொலிசாரால் அசைக்க முடியவில்லை...! அந்த நேரம்...

கோட்டையினுள்காற்றும் புகா இருள் அரக்கன் குடி கொண்ட அறையினுள்ளே வீற்றிருந்தான் ரிசல். எம தூதன் நெருங்கி, நெருங்கி வரவும் அவன் வாடிட வில்லை. மாறாக, அன்றலர்ந்த செந்தாமரையாக மாறியது அவன் முகம்.

"படார்'' எனத் திறந்தது அவன் இருந்த காராக்கிருகத்து அறைக்கதவு.

நுழைந்தவர்கள் அழைக்க வில்லை. சிங்கமென எழுந்து சென்றான் ரிசல். அவன் இரு கைகளும் பின்புறமாக இழுக்கப்பட்டு இறுக்கிய விலங்கு பூட்டப்பட்டது. துப்பாக்கி சகிதம் உள் நுழைந்த கொலை பாதகர் இருவரும் அவனை வெளியே இழுத்துச் சென்றனர். கோட்டையின் கதவுகள் தறந்தன.

யாரைக்காணக் குண்டாந் தடிக்கும் அஞ்சாமல் மக்கள் உணர்ச்சிப் பெருக்குடன் நின்றனரோ... அவனைக் கண்டனர். உணர்ச்சி வெடித்தது...

"மாவீரன் ரிசல் வாழ்க!

"எம்மை வாழ்விக்க வந்த மகத்தான தலைவனே வாழ்க!!''—இடி முழங்கியது போல் கடல் பொங்கியது போல், மக்கள் ஆவேசம் விண்ணை முட்டியது.

தூக்கு மேடையின் கீழ் நிறுத்தப்பட்டிருந்த 'ரிசல்' இதழ்க்கடையில் குறுநகை இழையோடியது. சாவின் வாசலிலும் சிரிக்கும் ஒருவனை, அந்த அன்னிய ஸ்பானிய ஏகாதிபத்திய ஏவல் நாய்கள் கண்டது அதுதான் முதல்தடவை போலும்!!

அதனாலே தான் அவர்கள் முகத்தில்' ரிசலின்'புன்னகை 'ஆச்சரிமாக'ப் பிரதிபலித்தது.

"கடைசியாக நீ எதையாவது கூறவிரும்புகின்றாயா?'' கல்லினும் கொடிய சிறையதிகாரி கேட்டான்.

'மாவீரன் ரிசல்' அம்மக்கள் சமுத்திரத்தை ஒரு முறை உற்றுப்பார்த்தான்' அங்கே கலங்கிய கண்கள், ஏங்கிய முகங்கள், பிரமை பிடித்து நின்ற வாலிபர்கள் இவர்கள் நடுவே அவனைப் பத்து மாதம் சுமந்து நொந்து பெற்ற ஏழைத் தாயும் அழகும் இளமையும் இணைந்த தன் மனைவியின் கண்ணீரும் தெரிந்தன. விம்மலும் விசும்பலும் எங்கும் வியாபித்து விட்டன. இத்தனைக்கும் அவன் எடுத்தது ஒரு சில கண நேரங்களே.

"என் ஆருயிர்த் தாய் நாட்டு மக்களே...! தூக்கு மேடையில் நிற்கும் இந்த வேளையில் உங்களைக் காணக் கிடைத்த இந்த இறுதிச் சந்தர்ப்பம் எனக்கு நிறைவையே தருகின்றது. இன்னும்... சில வினாடிகளில் நான் உங்களிடமிருந்து பிரிந்து விடுவேன். என் உடம்பில் உயிர் இருக்கக் கூடாது என்பதில் 'ஸ்பானிய' ஏகாதிபத்தியத்திற்கு மிகுந்த ஆசை. நான் தொடை நடுங்கும் கோழையல்ல. என் நாட்டின் விடுதலைக்காக இந்தத் தூக்குக் கயிற்றை முத்தமிட இருப்பதினால் எனக்கு எத்தனை ஆனந்தம். எனக்கு அறிவு தெரிந்தகாலம் முதலே நான் இதனை எதிர்பார்த்தவன் தான்... ஆனால்..., ஒரே ஒரு வருத்தம் என் நெஞ்சில் கவிழ்கிறது என் தாய்த் திருநாடு—இந்த எழில் மிகுந்த பிலிப்பைன்ஸ், அன்னிய வெறியரை விரட்டியடித்துச் சுதந்திரக் கொடியை ஏற்றி வாழும் அந்த வளமான காலத்தைக் காணமலே மடியப் போகின்றேன்... அதுதான் என் வேதனை... இருப்பினும்... கடல் போல் நிறைந்து நிற்கும் உங்களைக் கண்டது ஒரு ஆறுதல்... என்றோ ஒருநாள் எம் தாய்த்திருநாடு விடுதலை கண்டு விடும் என்று மனமாற நம்புகிறேன்...!

**வண்ணை ஆனந்தன்**

''இறுதியாக உங்களுக்கொன்று...! இந்த ரிசால் வேறு எதற்காகவும் கொல்லப்படப் போவதில்லை. என் தாய் நாட்டின் சுதந்திரத்தைக் கேட்டதற்காகவே கொல்லப் படப் போகிறான். என்னை இந்த மேடையில் ஏற்றியதன் மூலம் எம் சுதந்திர வெறியை அடக்கிவிட்டதாக எண்ணுகிறது 'ஸ்பானிய' ஏகாதிபத்தியம். சுதந்திரம் என்பது தூக்குமேடைகளாலும் துப்பாக்கிகளாலும் அடக்கிவிடக்கூடியதல்ல என்பதை அவர்கள் புரியவில்லை. புரியவைக்க வேண்டியது உங்கள்கடன். என்னைப் பெற்றவளே! தாயே!! உனக்கும் சிரம் தாழ்த்துகிறேன். என் தாய் நாடே உன்னை வணங்குகிறேன், என மனைவிக்கும் நான் கூறவேண்டியது ஒன்று

—7-ம் பக்கம் பார்க்க

## வாசகர் நறுக்கு

அன்புள்ள ஆசிரியருக்கு,

28.12.75 சுதந்திரனில் 'கட்டுப்பாடு காப்போம்' என்ற ஆசிரியத் தலையங்கம் தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களில் மாமியின் சேலை நழுவிய நிகழ்வாகப் பல்லாண்டு காலம் இருந்த மாபெரும் குறைகளுள் ஒன்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இயக்க வளர்ச்சிக்காக செயற்பட வேண்டிய பல துறைகளும் செயலற்றுஇயக்கமே தொய்ந்துபோன காலங்களில் தன் கூர்ந்த மதிநுட்பத்தால் மக்கள் மத்தியில் உணர்ச்சி சுன்றுது இயக்கத்தைக் காத்து வளர்த்த தலையாய பணி சுதந்திரனுக்குரிய தனிச் சிறப்பு.

தேசத்தின் உயர்வுதாழ்வுக்கும், அரசியற் கட்சிகளின் புகழுக்கும் இகழுக்கும், இனத்தின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் பத்திரிகைகளின் பணி அளப்பரியது. அத்தனை சக்திவாய்ந்த பத்திரிகைகள் விடுதலை இயக்கங்களுக்கு இதயம்போன்றவை. ஒரு விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்கு நாளேடு, வார ஏடு, மாத ஏடு எனப் பல இதழ்கள் வெளிவருதல்வேண்டும். தி. மு க.சிற்பி அறிஞர் அண்ணா மட்டும் விடுதலை. திராவிட நாடு, காஞ்சி ஹோம்லாண்ட் என்ற நான்கு இதழ்களுக்கு ஆசிரியராகி அரும்பணியாற்றினார். இதைவிடதின இதழ்களையும் வார இதழ்களையும் தி.மு.க.வைச் சேர்ந்தோர் நடத்திவந்தனர். இயக்கம் இலட்சியத்தை நோக்கிப் பீடு நடைபோட இவைகள் அருஞ்சேவை ஆற்றின.

ஆனால் இத்துணைப்பொறுப்பினையும் வார இதழாக மலரும் சுதந்திரன் சாதிப்ப தென்றால், அதன் ஆசிரியரின் சாணக்கியத்தை மக்கள் போற்றிப் புகழ்வதில ஏது ஆச்சரியம்?

—வித்துவான் வ. கந்தையா, கொக்குவில்.

●

11 1.76 சுதந்திரன் இதழ் கண்டேன். தை மத்தியிலே பத்துத் தமிழர் பலியான துயர்தோய்ந்த சரித்திரத்தை அரசியல் மடலிலே விவரித்திருந்தீர்கள். அதனை வாசித்தபோது என் மனக் கண்ணிலே தங்கத் தமிழரின் ஆய்வு மாநாட்டுக்காட்சிகள் நிழலாடின. உணர்ச்சியால் சொதித்துப்போனேன். உணர்ச்சிமிக்க அந்த அரசியல் மடல் மிகச் சிறப்பாக இருந்தது. உங்கள் கடமையைத்தான் நீங்கள் செய்தீர்கள் என்றாலும் தமிழினம் உங்களுக்கு மிகவும்கடமைப் பட்டிருக்கிறது. நிச்சயம் உயிர்ந்த தமிழர்களின் ஆத்மா தங்கள் பணியை வாழ்த்தும்.

—காவலூர் எஸ். ஜெகநாதன், கொழும்பு-2.

## இனமுழக்கம் வெளியீட்டு விழா

அனலை செழியனின் 'இனமுழக்கம்' பத்தொன்பதாவது ஆண்டுவிழா தமிழர் கூட்டணிக் காரியாலய வளவினுள் மிகக் கோலாகலமாக (9-1-76) வெள்ளி மாலை 5-30 மணியளவில் நடைபெற்றது. இனமுழக்கம் நிதிக்காக நுழைவு வாயிலில் 2, 1 ரூபா சீட்டுக்கள் விற்பனையாகின.

பல நூற்றுக்கணக்கான இளையோரும், யுவதிகளும், முதியோரும், பெரியோரும், தாய்க்குலமும் இதில் பங்கு பற்றினர். விழா அடலேறு மு ஆலாலசுந்தரம் அவர்களின் தலைமையில், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களின் ஈழத் தமிழ் தேசியகீதத்துடன் ஆரம்பமாயிற்று. வரவேற்புரையை இரகுபதி பால சிறீதரன் நிகழ்த்தினார். முதற் பிரதி பூ. கணேசலிங்கம் அவர்களால் மில்க்வைற் அதிபர் கனகராசாவிற்கு விற்கப்பட்டது.

கோப்பாய் பா. உ. சிந்தனைச்சிற்பி சி. கதிரவேற்பிள்ளை சொற்பெருக்காற்றும்போது, நமது சமுதாயம் சிதறிய சமுதாயமாக உள்ளது. சமுதாய ஒற்றுமை நமக்கு மிக அவசியமென்றும், சுதந்திரமாக வாழ சாதிசமய வேற்றுமைகளை ஒழிக்கவேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

தந்தை செல்வா பேசும் போது தனக்கேஉரியமொழியில், இந்நாட்டை அரசோச்சிய இரு அரசியல் கட்சியுடனும் பொருத்தம் செய்தேன். அதைச் சிங்கள மக்கள் ஏற்கிறார்களில்லை; அதனால் நாம் பிரிந்துபோவதைத்தவிர வேறு வழியில்லை என்றார்.

திரு. திருநாவுக்கரசு அவர்கள் விகடமாகப் பேசி அனைவரையும் சிரிப்பொலியில் ஆழ்த்தினார்.

நாவலர் அமிர்தலிங்கம் பேச்சின் ஆரம்பத்தின் போதே "நான் இன்று அதிகாலை நான்கு மணிக்கே தம்பியருடன், தியாகிகளின் நினைவுச் சின்னம் அமைக்கும் வேலையில் ஈடுபட்டேன். அதிகாலையின் பெய்த பனியினால் பாதிக்கப்பெற்றேன்; உங்களுக்குத் தான் தெரியுமே பனிக்கும் எனக்கும் பொருந்தாது என்பது'' எனக் கூறியதும் சபையோரின் சிரிப்பொலி அடங்க அதிக நேரமாயிற்று. பின் "ஏன்வேண்டும் தமிழீழம்'' எனத்தலைப்பின்கீழ் அழகான அரசியல் உரைநிகழ்த்தினார்.

சிம்மக்குரலோன் சிவசிதம்பரம் மாசி 4-ல் ஈழத்தமிழகத்தில் மட்டுமல்ல வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்பும் உதய சூரியன் கொடி பறக்கும் என வலியுறுத்தி தனித் தமிழ்நாடு ஏன் அவசியமானது என்பதையும்,வெளி நாட்டிலுள்ள இலங்கை அறிஞர்கள் தத்தமது நாட்டிலுள்ள தூதருக்கு எடுத்தியம்புவரென அறிவுறுத்தினார்.

மட்டக்களப்பு பிரதிநிதி திரு. இராசதுரை பேசும் போது "ஏடும் இயக்கமும்'' எனும் தலைப்பில் சொற்பெருக்காற்றினார். எமது இயக்கத்திற்கு சுதந்திரன்' மட்டும்போதாது கிழமைகளிலுள்ள ஏழு நாட்களிலும் தமிழீழப்பகுதியில் ஒவ்வோர் பகுதியிலிருந்தும் ஒவ்வோர் விடுதலை ஏடுவெளிவரவேண்டும் என வலியுறுத்தினார். இளையோர் அனைவரும் மாதத்தில் 3 ரூபா இயக்கத்திற்குக் கொடுத்து பத்திரிகை வளர்ச்சிக்கு ஊக்குவிக்கவேண்டுமென வலியுறுத்தினார்.

இன்னும் சு. க. மகேந்திரன், ச. ம. பீற்றர் பொன்கலன், தென்னவன், க. பொ. இரத்தினம், பூ. கணேசலிங்கம் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். நன்றியுரையை தேவதாசன் வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதியெனும் பேயை

# சமுதாயத்திலிருந்து விரட்டுவோம்!

ஒருவனுக்கு நோய் கண்டுவிட்டால் உடனடியாக அருகில் உள்ள ஒரு வைத்தியரிடம் கொண்டு செல்கிறோம். அவரால் முடியாது விட்டால், ஊரிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கிறோம். அங்கும் இயலாது போய்விட்டால், பெரிய வைத்தியசாலைக்குக் கொண்டு போகிறோம். அங்குள்ள நிபுணர்களும் கைவிட்டுவிட்டால், 'ஏதோ பேய்க் குறைபாடு' என்ற முடிவுக்கு வருவது வழக்கம். அதுபோல் நாயன்மார் காலத்திலிருந்து, சமய குரவர்கள், வள்ளுவர், ஒளவையார், வள்ளலார் இராமலிங்க அடிகள், பாரதியார், பாரதிதாசன் என்று இன்று காசி ஆனந்தன் வரை; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றும், 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்றும், 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றும், 'இருட்டினில் உலகம் இருக்குதடா, 'சாதி உண்டென்று சொல்வானும் இருக்கிறனடா' என்றும் இப்படி பல்வேறு விதமாக தமிழ் இனத்தைப் பிடித்துள்ள 'தீண்டாமை' நோய்க்கு வைத்தியம் பார்த்தாகிவிட்டது. இன்னும் அசைந்தபாடில்லை. எனவே, தமிழினத்திற்குப் பேய் பிடித்துவிட்டதோ என நினைக்கத் தூண்டுகிறது.

இன்று தமிழினத்தின் நிலை என்ன? பெரும்பான்மையினரால் உரிமைகள் பறிக்கப்பட்டு, கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டு, சமரச வழிகள் எல்லாம் சலித்துப் போய்விட, ஒரே குரலில் தனிநாடு' கேட்டு நிற்கிறது இலங்கைத் தமிழினம். ஆனால் தமிழினத்தின் ஒரு பகுதியினரின் (சிறுபான்மைத் தமிழர் என, வருத்தத்திற்குரிய வகையில் அழைக்கப்படுவர்) நிலை என்ன?

சில மாதங்களுக்கு முன் புத்தூரில் நடந்ததாக ஒரு சம்பவம் பத்திரிகைகளில் வந்திருந்தது. தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் ஒருவரின் திருமணவிழாவிற்கு தவில் வாசித்ததற்காக ஒரு கலைஞரை உயர்சாதித் தமிழர், இனி அவரை தமது வைபவங்களுக்கு அழைப்பதில்லையென புறக்கணித்துவிட்டனராம்.

சென்ற வருடம் நெல்லியடியில நடந்த ஒரு சம்பவம். புலோலியிலிருந்து செல்வச் சந்நிதிக்கு காவடி எடுத்துச் சென்ற சிறுபான்மைத் தமிழ்த வகுப்பினரின் ஊர்வலதத்தில் சென்ற சிலர் மாலி சந்தியில் உள்ள கோயில் ஒன்றில் தாகத்திற்குத் தண்ணீர் அள்ளியதற்காக பொல்லுகளாலும், கற்களாலும் தாக்கப்பட்டனர்.

பல்கலைக்கழக வளாகங்களில் கூட சில வெறுப்புக்கிடமான சம்பவங்கள் நடைபெற்றதாக அறியக்கிடக்கிறது. தனிநாட்டுக் கோரிக்கை மும்முரமாக இருக்கும் இக்கட்டத்தில் 'தனிநாடு கிடைத்தால், நாங்கள் பழையபடி சிரட்டை எடுக்கவேண்டி வரும்' என்ற பயம் சிறுபானமைத் தமிழர்களிடம் பரவலாக இருந்துவருகிறது. அதற்கு அவர்கள் மேற்படி சம்பவங்களை உதாரணங் காட்டுகிறார்கள். தமிழர் கூட்டணியிலும், இளைஞர் பேரவையிலும் உள்ள சில சிறுபான்மைத் தமிழர்களைக் காட்டிச் சமாளித்துவிடக்கூடிய பிரச்சனையல்ல இது.

இந்திய விடுதலையின் போது, தீண்டாமைப் பிரச்சனையின் தாக்கத்தை உணர்ந்த மகாத்மா காந்தி, விடுதலைப்போரை சற்று ஒய விட்டு இந்தப் பிரச்சனையில் அதிக கவனம் செலுத்தினர்

**ஈழமாறன்**

என்பதை நினைவு கூர வேண்டியது அவசியமாகிறது. அவர் எடுத்த பணியைத் தொடர்ந்து அறிஞர் அண்ணாவும், இன்று கலைஞர் கருணாநிதியும பெருமளவு முன்னேற்றிவிட்டனர் என்பது மறுக்கமுடியாத உண்மை.

தமிழ் ஈழ விடுதலைக்காகப் போராடும் தமிழினம், தம்மவரில் ஒரு பகுதியினரின் பயத்தைப் போக்க வேண்டிய கட்டத்தை இனி மேலும் ஒத்திப்போட முடியாது. இந்தப் பிரச்சனையை அசட்டையாக விட்டால் கம்யூனிஸ்டுகள் இதில் புகுந்து குட்டையைக் குழப்ப முனைவார்கள். கம்யூனிஸ்டுகளுக்கு வட பகுதியில் இன்னும் அற்பசொற்ப செல்வாக்கு இருப்பதற்கு, தலையாய காரணம் இந்தத் தீண்டாமைப் பிரச்சனை என்பதை அரசியல் ஈடுபாடுள்ள அனைவரும் அறிவர்.

நாட்டின் பணப்பெட்டியில் அக்கறை கொண்டு மரவரியை நீக்கி சிறுபான்மைத் தமிழரின் முன்னேற்றத்தை கெடுத்த எல்.எம். பெரேரா இன்று அவாகளுக்காகத் தனித்தொகுதி கேட்கிறார். சோழியன் குடுமி சும்மா ஆடாது. இன்னொரு பக்கத்தில் 'ஜனவேக'க் கூட்டமும் அவர்களிடையே ஊடுருவ முயற்சிக்கிறது.

தனிநாட்டுக் கோரிக்கையின் தாக்கத்தை அதிகரிக்கவும், தோன்றும் போதே தமிழ் ஈழம் சமதர்ம பூமியாக மலருவதற்காகவும், இந்திய விடுதலையின்போது காந்தி நடந்துகொண்ட வழியைப் பின்பற்றி தமிழா கூட்டணியும் இளைஞர் பேரவையும் இந்தப் பிரச்சினையில் தனி அக்கறை எடுக்கவேண்டும். விடுதலைப் போராட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்பதல்ல; இந்தப் பிரச்சனையைத் தீர்க்கப் போராடுவதும் விடுதலைப் போராட்டத்தின் ஒரு அம்சமே இதற்காக பின்வரும் வழியை எனது கருத்தாக கூறவிரும்புகிறேன்.

தமிழர் கூட்டணி நிர்வாகத்தின் கீழ், 'சமூகக் குறைபாடுகள் ஒழிபபுக்குழு' என்ற ஒரு குழு தனியாக இயங்கவேண்டும. இதில், இதய சுத்தியுடன் உழைக்கக்கூடியவர்களைப் பொறுப்பாளிகளாக நியமிக்க வேண்டும். இதில் சிறுபான்மைத் தமிழர்களும் இடம்பெற வேண்டும். இக்குழு சாதி ஒழிப்பில் தீவிர கவனம் செலுத்தவேண்டும். இதற்கெனப்பல கிராமங்களிலும் பிரச்சார நடவடிக்கைகளையும், தேவையானபோது நேரடி நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுப். அத்தோடு இன்னும் சில கிராமப் பகுதிகளில் மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு கல்வி, பொருளாதார சுபீட்சத்திற்கான வழிகளை அபிவிருத்தி செய்வதும் இவர்களது நோக்கமாக அமைதல் வேண்டும்.

தமிழரின் பல பிரச்சனைகள் மத்தியில், இப்படியான நடவடிக்கைகளில் தீவிர கவனம் செலுத்துவதற்குத் தமிழர் கூட்டணியால் இயலாதென்பதை நோக்குமிடத்து, இப்படியொரு குழுவை இதில் ஈடுபடுத்துவது அத்தியாவசியமாகிறது. இந்த நடவடிக்கை மிக மிக அவசியம் என்பதை கவிஞர் கண்ணதாசனின் கவிதை ஒன்றைக் காட்டி முடித்துக் கொள்கிறேன்:

சாதியெனும் பகைஉணர்ச்சி
வாழுமட்டும்
தமிழ்நாட்டின்
முன்னேற்றம்
கானல் நீர்
நீதிமுதல் நெறிமுறைகள்
பிறர்க்கும் தந்து
நிலைத்திருந்த
பெருமையெல்லாம்
மண்ணிற் சாயும்.

---

சின்னண்ணுவின் சிந்தனைகள்:

## அஹிம்சையா பலாத்காரமா?

தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தையடைவதற்கு எந்த வழியைப் பின்பற்றலாம்? அஹிம்சையா பலாத்காரமா? பலாத்காரம்தான் வழியென்றல் சிங்களவரைப்போல் ஒரு படை திரட்டவேண்டும். ஆயுதங்களைச் சேர்க்கவேண்டும். இளைஞருக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும்; வெளி நாட்டு ஆயுத உதவி எடுக்கவேண்டும். காட்டிக்கொடுக்கும் துரோகிகளிடமிருந்து தப்பவேண்டும். இத்தனை நடந்தாலும் சிலவேளைகளில் பலாத்காரம் தோல்வியடையலாம். எல்லாப்பலாத்கார இயக்கங்களும், புரட்சிகளும் இறுதியில் வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை. பதினறு வயதுச் சிறுமி ஜெட்விமானத்தைக் கடத்தும் யுகமாக இது இருந்தாலும் நமது இனம் இன்னும் அதற்கு ஆயத்தமில்லை. இன்னும் பலாத்காரத்தினல் வெற்றிபெற்றாலும், நிரந்தரமாக எல்லைகளை பலாத்காரமாக பாதுகாக்க வேண்டும். இவையெல்லாவற்றுக்கும் நாம் ஆயத்தமா?

ஆகவே இன்று நம்கையில் உள்ள ஆயுதம் ஆத்ம சக்தி, மனசக்தி. இதை நாங்களே அபிவிருத்தி செய்துகொண்டு அஹிம்சைப் போராட்டத்தை நடத்தலாம். இதை எவரும் காட்டிக்கொடுத்துவிட முடியாது; இது தோல்வியையும் தழுவாது எதிர்காலத்தில் எல்லைப் பிரச்சினை இல்லாது சிங்கள நாட்டோடு சமாதான சக வாழ்வை நடத்த உதவும். பலாத்காரத்தில் மிருகச்சக்தியை மிருக சக்தியோடு மோதி வெல்லவேண்டும். அகிம்சையில் ஆத்மசக்தியை ஆத்மசக்தியோடு மருவி, விழுந்து கிடக்கும் மற்றவன் மனச்சாட்சியை விழிப்படையச் செய்து உயர்த்த வேண்டும். ஆகவே பண்பும், வெற்றியும் சேதக் குறைவும் உள்ள வழியும், நமது இன்றைய சூழ்நிலைக்கும், எதிர்காலத்துக்கும் பொருத்தமான வழியும் அஹிம்சைதான்.

---

## பொலிசாரின் அக்கறை!

தமிழ்த்தியாகிகளின் நினைவுத் தூவியை பல இளைஞர்கள் சுறுசுறுப்புடன் கட்டி முடித்துக்கொண்டிருந்தனர். இவர்களை உற்சாகப் படுத்துமுகமாக தாவலர் அவர்கள் அவ்விடத்தில் அடிக்கடி வந்து அவ்விளைஞர்களை உற்சாகப்படுத்தினர். இதை அறிந்த உயர்மட்டப் பொலீஸ் சூரப்புலிகள் நினைவுத் தூபிக்கு முன்பிருக்கும் வீரசிங்கம் மண்டபத்தில் சிற்றூழியர் தொட்டு உயர்மட்ட அதிகாரிகள்வரை அமிர் இவ்விடத்திற்கு வந்தாரா? எவ்வளவு நேரம் நின்றார்? என்ன செய்தார்? என்பது பற்றி விசாரித்துச் சென்றார்களாம்.

---

## தமிழ்த்தாய் தலைகுனிந்து நாணவோ?

தென்புலோலி, பண்டிதர் வி. பரந்தாமன்

வாளெடுத்துப் பகைவடவர் தலைதறித்த தமிழினம்.
வாழ்விழந்து வலிதுறந்து நிலையழிந்து மாழ்வதா?
தாள்பிடித்துத் திறைகொடுத்து முறையழிந்த கோழைகள்
தலையெடுத்து நமையடக்கிப் பேரெடுத்து ஆள்வதா?
தோள்குலுக்கிப் படைதிரட்டித் துடித்தெழுந்தே ஏகடா!
துடுக்கணைத்து வெங்கொடியர் செருக்கடக்கி மீளடா!
''பாலகுடித்த முலையறுதது பழிதுடைப்பன்'' என்றவோர்
பெண்மறத்தி குலம்வளர்க்க வந்துதித்தோன் நீயடா!

சேரரென்ற வீரமன்னர் மாறரென்ற தென்னவர்
சினப்புலியின் கொடியெடுத்த சோழரெங்கள் முன்னவர்
சேரநின்று பகைகடிந்த செய்தியின்று பொய்த்ததோ?
சீரழித்துத் தமிழ்குலைத்துச் சிறுமதியர் உய்யவோ?
போரறிந்து மனமகிழ்ந்த திறமையெங்கு போனதோ?
புவியழந்த எந்தமிழ்த்தாய் தலைகுனிந்து நாணவோ?
நேரெழுந்த வாளெடுத்துப் பகையரசை வெட்டுவோம்!
நிலையுயர்ந்த புகழ்சிறந்த போர்முரசு கொட்டுவோம்!

உலகினுக்குக் கலைகொடுத்த பெருமைமிக்க திராவிடர்
உரிமையற்று வளமிகுந்த உடர்வழிந்து போவதா?
வலிமைமிக்க தலைமையுற்ற மகளிரொன்று சேருவீர்!
வகைதெரிந்தே இனிமையுற்ற தனியரசு காணுவீர்!
புலிபொறித்த தமிழ்க்கொடியை வானளாவ நாட்டுவோம்!
புகழ்சிறந்த இராவணனின் யாழையின்னே
மீட்டுவோம்!
எலியையொத்து மானமின்றி வாழ்வதுவும் வாழ்க்கையா?
இறப்பதென்றுமுடிவெடுத்துப்போர்க்களத்தில் ஏகுவீர்

(இக் கவிதைகள், 04.12.1967ல் இயற்றப்பட்டன)

---

### சுதந்திரன் புதிய சந்தா விபரம்

1976ம் ஆண்டு சனவரியிலிருந்து சுதந்திரன் புதிய சந்தா (உள்ளூர்) விபரம் வருமாறு:-

- ஓர் ஆண்டுக்கு— (புதன், ஞாயிறு இதழ்களுக்கு) ரூபா 50-00
- அரையாண்டுக்கு— ரூபா 25-00

சந்தாப்பணத்தை காசோலையாகவோ காசுக் கட்டளையாகவோ (நேரடியாக ரொக்கமாகவோ) செலுத்தலாம்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

நிர்வாகி
சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக வீதி,
கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

# பொலிசார் கடமை

மட்டக்களப்பில் அண்மைக்காலமாக நடைபெற்று வரும் அரசியல் ரீதியான வன்முறைச் சம்பவங்கள் கிழக்கு மாகாணம் முழுவதற்குமே ஒரு சவாலாக இருப்பதுடன் அமைதியும், பண்பும் நிறைந்த கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் தீராத அவமானத்தைத் தந்து கொண்டிருக்கிறது.

தாம் விரும்பிய அரசியல் கருத்துக்களை யெடுத்துச் சொல்வதற்கும்—தாம் விரும்பிய அரசியல் கட்சிகளை ஆதரிப்பதற்கும்—அதற்காக அச்சமின்றிப் பிரசாரம் செய்வதற்கும் எந்த ஒரு குடிமகனுக்கும் உரிமையிருக்க வேண்டும் என்பது ஜனநாயக நியதி.

இந்த நியதியை மீறி — ரௌடித்தனத்தையும், காலடைத்தனத்தையுமே அரசியலாக்கி, குண்டர்களையும் போதாததற்கு பொலிசாரையும், துணையாகக்கொண்டு —அரசியல் ரீதியாக கருத்து மாறுபட்டவர்களை அடித்து உதைத்து, தாக்கி மிரட்டும் அநாகரிகச் சம்பவங்கள் மட்டக்களப்பிலே நடைபெறுவதாக இருந்தால்—எத்தனை நாளைக்குத்தான் இதை மக்கள் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருக்க முடியும்? பார்த்துக்கொண்டிருக்க முடியும்?

மட்டக்களப்பில் தமிழர் கூட்டணியின் ஆதரவாளர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு அடிக்கடி நடைபெற்று வரும் இந்த வன்முறை வெறியாட்டத்தை — துட்டத்தனத்தை—தட்டியடக்க வக்கின்றி, வகையின்றி, தெம்பின்றித் திராணியின்றி — பொலிசார் அங்கு என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று கேட்கிறோம்.

அரசாங்கம் — எதிர்க்கட்சி என்ற எதுவித பாகுபாடுமின்றி அனைத்துப் பிரஜைகளுக்கும் பூரண பாதுகாப்புத் தரவேண்டிய பொலிசார் — மட்டக்களப்பில் அரசாங்க ஆதரவாளர்கள் என்று சொல்லப்படும் ரௌடிகள் ஆடுகின்ற கொட்டத்தையடக்குவதில் ஏன் கவனம் செலுத்துகிறார்களில்லை? அரசியல் அதிகாரம் அங்கு ஆடும் அக்கிரம ஆட்டத்துக்கு மட்டக்களப்புப் பொலிசாரும் அஞ்சி நடுங்குகிறார்களா?

பொலிசாரிடம் உத்தரவு பெற்று நடைபெறவிருந்த தமிழர் விழா பற்றி ஒலிபெருக்கியில் விளம்பரம் செய்யப்போன தமிழர் கூட்டணி இளைஞர்கள் இருவர், சென்ற வாரம் குண்டர்களால் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் — இது பொலிசார் அலட்சியப்படுத்தக்கூடிய ஒரு விஷயமா?

மட்டக்களப்பில் நடைபெறும் அரசியல் அடிப்படையிலான இத்தகைய ரௌடித்தனங்களை அடக்கப் பொலிசார் முன்வரத் தயங்கினால் — இனி ஒவ்வொரு அரசியல் இயக்கமும் தனக்கெனத் தனித்தனியாக குண்டர்படைகளை வைத்துக்கொள்ள வேண்டியதுதானா? இப்படியே தொடங்கினால், இந்த நாடு உருப்படுமா? சமுதாய அமைதி இருக்குமா?

எனவே மட்டக்களப்பில் தலையெடுத்துள்ள வன்முறை அரசியலை — ராஜாதிராஜ ரௌடித்தனங்களை அடக்கி—அங்குள்ள மக்களுக்கு அச்சமற்ற வாழ்க்கையை உறுதிப்படுத்துவது பொலிசாரின் இன்றியமையாக்கடமையென்பதை இங்கு வற்புறுத்துகிறோம். இது விஷயத்தில் பொலிசார் துணிகரமான நடவடிக்கையெடுக்கவேண்டுமென அமைதியை விரும்பும் மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்!

# நான் கண்ட கதாநாயகன்

தேனாடு மாமன்றத்தினரின் தமிழ் விழாக்கான மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்துக்குச் சென்றேன். பெண்டுகள், பிள்ளைகள், குழந்தை குட்டிகள், முதியோர்கள் இளைஞர்கள் எல்லோரும் 'சேச்சே' என்று திரும்பிக்கொண்டிருந்தனர். மழைக்காகத்தான் இவர்கள் திரும்புகிறார்களாயிருக்கும் என்று நான் தொடர்ந்தேன்.

மாநகர வாயிலிலே ஒரு பெருத்த கூட்டம். வீதி ஓரங்களிலே பத்துப் பதினைந்து பொலிசார்கள் துப்பாக்கியுடன். சில சினிமாப் படங்களிலே காட்சியளிக்கின்ற கறுப்பு நிறக் குண்டர்கள் வீதி முழுவதும் நடுவிலே ஒரு நல்ல மனிதர், வெள்ளை மனிதர். அவரை நான் என்றுமே காணவில்லை சிவகாமியின் செல்வன் படத்திலே வாணிசிறீயைக் கற்பழிக்கின்ற அந்த மடேனகருடைய உருவமாக இருந்தது அது.

குண்டர்கள் என்னைத் தடுத்தனர். தமிழ் விழாவுக்குப் போனால் காலை முறித்து விடுவதாக எச்சரித்தனர்.

'முடியுமானால் முறி பார்ப்பம். இந்தா நல்லா முறி'' என்று எனது காலை நானே கொடுத்தேன்.

துப்பாக்கியோடு நின்ற பொலிசார்கள் மற்றப்பக்கமாகத் திரும்பினர் அந்த நல்ல மனிதரின் பார்வை என் பக்கம் திரும்பி மீண்டும் குண்டர்களின் பக்கம் திரும்பியது.

குண்டர்கள் தொடர்ந்தனர் "அங்கே விழா நடக்காதாம். நீ மட்டும் ஏன் போகிறாய் திரும்பிப் போ''

''நான் போவது போகாததைக் கேட்க உனக்கு உரிமையில்லை. நான் கூட்டத்துக்குச் செல்வது செல்லாதது என் இஷ்டம்'' என்று கூறிக்கொண்டு விறிச் சென்று சென்று விட்டேன்.

உள் மண்டபம் வெறிச் சோடிக் கிடந்தது!

வெளியே தலைவர் அன்ரன் செயலாளர் வேணுதாஸ்—பொருளாளர் தியாகராசா தவம் நால்வரும் நின்றனர்.

என்னைக் கண்டதும் "எப்படி இதால தப்பி வந்தீங்க?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டனர்.

எனக்கு முழு விபரமும் விளங்கிவிட்டது!

எனது வீரப் பரம்ரையை அவர்களுக்கு எடுத்து விளக்கினேன்!

மட்டக்களப்பு ஒரு நாகரீகமான ஊர். அதற்குக் கதாநாயகன் என்று சொல்லுபவர்கள் குண்டர்களுக்கு மத்தியிலும், பொலிஸ்காரர்களுக்கு மத்தியிலும் நின்று வீரம் பேசுவது பிழை. அது கோழைகளின் வேலை. உண்மையான ஒரு தமிழனுக்குப் பிறந்தவன் செய்வதில்லை இந்த வேலை. புறமுதுகு காட்டி ஓடியதாக புறநானூறு புகட்டவில்லை.

நான் அந்த நால்வருடனும் உரையாடினேன். எனக்காக மட்டும் அவர்கள் கூட்டத்தை நடாத்தினார்கள். நான் அவர்களுக்காகப் பரிதாபப்பட்டேன்.

உண்மையிலே பணக்காரர்களுக்கு பணத்தின் மீது கூடுதலான ஆசைதான். யாரையும் வெட்டிக்கொன்று இன்னும் இரண்டை எப்படியும் சேர்க்கமுடியாதா என்பதே அவர்கள் எண்ணம்.

மட்டக்களப்பிலே பெரும் பணக்காரர்களில் ஒருவர் எஸ். ஏ. செல்வநாயகம். அவர் அவருடைய அழகு மகன் — அந்த ராஜாவை குறைந்தது எட்டாந்தரத்துக்கு என்றாலும் படிப்பித்திருக்கக் கூடாதா? பாடசாலைகள் இல்லையென்றாலும் பரவாயில்லை. பேர் போன பல பாடசாலைகள் நிறைந்த ஒரு இடம் மட்டக்களப்பு.

இப்படிச் சேர்ந்த பணத்தைக் கொண்டுதான் போய் விட்டாரா?

இந்த இடத்தில் நான் ஒன்றை முக்கியமாகச் சொல்லவேண்டும். கூட்டணியினருக்கு இளைஞர் பேரவை எப்படி பக்கபலமாக இருக்கிறதோ அதேபோல இளைஞர் பேரவைக்கு கூட்டணியினரும் பக்கபலமாக இருக்கவேண்டும்.

குடம் நிறையத் தண்ணீர் ஊற்றி அடுப்பிலே வைத்தால் கொஞ்ச நேரத்தின் பின்புதான் கொதிக்கிறது. கொதித்தபின் தொடர்ந்து அதைச் சூடாகவைத்திருப்பதற்கு ஒரு மெழுகுதிரிச் சுவாலை இருந்தாலே போதும். இல்லா விட்டால் மீண்டும் அதைக் கொதிக்க வைக்க எவ்வளவு நேரம் எடுக்கும்?

மட்டக்களப்பு இளைஞர்கள் கொதித்துவிட்டார்கள். அவர்களைச் சூடாக வைத்துக் கொள்வதற்கு ஒரு மெழுகுதிரிச் சுவாலையென்றாலும் இங்கில்லை.

இல்லாவிட்டால் தமிழ் இளைஞர்களுக்கு இல்லாத வீரம் — துணிவு — தைரியம் இந்த எட்டப்பர் கூட்டத்துக்கு எப்படி வந்தது.

கூட்டம் முடிந்து நாங்கள் ஐவரும் வெளியே வந்தோம் எங்களை நோக்கி எத்தனையோ விசில்கள் — சத்தங்கள் — கிண்டல்கள் — கேலிகள்.

இந்தக் கதாநாயகன் ஒன்றை மட்டும் உணர வேண்டும். அவரைப்போல் முட்டாள்களல்ல கூட்டணியினர் பண்பு தெரிந்தவர்கள் தமிழ் ஈழம் கிடைத்ததும் இவரை ஒரு மனிதராகக் கருதி இவருக்கு ஒரு தண்டனையைக் கொடுக்க மாட்டார்கள். துரத்திவிட மாட்டார்கள் பிழைத்துப் போகட்டும் பேயன் என்று மன்னித்து விடுவார்கள்.

மன்னித்தல் ஒன்றுதானே தமிழர்களின் பரம்பரைச் சொத்து.

—திருவருள்




புதன் இதழில்....

'சிறீலங்காத் தமிழர்கள் எனும் தலைப்பில் இலண்டனிலுள்ள அனைத்துலக நிறுவனமான 'சிறுபான்மை உரிமைக் குழு' ஈழத்தமிழர் பிரச்சினையைப்பற்றி வெளியிட்டுள்ள ஆங்கில நூலின் முகப்பு அட்டை இது. இந்த ஆங்கில நூல் தமிழ்ப்படுத்தப்பட்டு ஒவ்வொரு சுதந்திரன் புதன் இதழிலும் இப்போது வெளிவந்துகொண்டிருக்கிறது. இதுவரை இருபகுதிகள் வெளிவந்துள்ளன: மூன்றாவது பகுதி 21-1-76 புதன் சுதந்திரனில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையிலும்

# சிங்களவர் திணிப்பு!

## மருத்துவத்துறையிலும் தமிழனுக்கு தலையடி!

மருத்துவத் துறையிலும் தமிழன் தனது தனித்தன்மையைச் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு இழந்து வருகின்றான் என்பதற்கு கைதடி ஒரு கைகாட்டி.

தமிழனது தொண்டைக்குள் சிங்கள மொழிமட்டுமல்ல, இப்போது சிங்கள மருந்தும் ஊற்றப்படுகிறது.

தென் இலங்கையில் இது நடந்தால் பரவாயில்லை. ஆனால் சுத்தமான தமிழ்ப் பிரதேசத்தில் இது நடைபெறுகிறது.

பிரதம வைத்திய அதிகாரிமட்டுமல்ல, மருந்துக் கலவையாளர், துண்டு எழுதுபவர் எல்லோரும் சிங்களவரே. ஏன் காவலாளிகள் கூடச் சிங்களவர்களே!

யாழ்ப்பாணத்தில், கைதடியில் உள்ள ஆயுள்வேத வைத்திய சாலையில் இந்த அவல நிலை இருக்கிறது.

எத்தனையோ தகுதி வாய்ந்த தமிழ் சித்த வைத்தியர்கள் இருந்தும், பிரதம வைத்திய அதிகாரி பதவிக்குச் சிங்களவர் ஒருவரையே சிங்கள அரசு நியமித்திருக்கிறது.

இவர் மாதத்தில் பதினைந்து நாட்களை மட்டும் கைதடியிலும், மிகுதி பதினைந்து நாட்களை அநுராதபுரத்திலும் செலவழிக்கிறார். வைத்தியசாலை பற்றிய அக்கறை அவருக்கு அவ்வளவுதான். இருக்கிற பதினைந்து நாட்களிலும் வைத்தியசாலைக்கு வரும் சிங்கள நோயாளிகளை மட்டும் பார்க்கிறார். தமிழ் நோயாளிகளைத் திரும்பியும் பார்ப்பதில்லை.

தமிழ் நோயாளிகளைக் கவனிக்க இரண்டு தமிழ் உதவி வைத்தியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் சித்த வைத்தியர்கள். ஆனால் வைத்தியசாலையில் சித்த மருந்துகள் இல்லை. இருப்பது ஆயுள்வேத மருந்துகள் அதையே இவர்கள் எழுதுகிறார்கள்.

சித்த வைத்தியத் துறையை இந்த சிங்கள அரசு திட்டமிட்டு நசுக்கி வருகிறதென்பது பலர் அறிந்த இரகசியம்.

முன்பு சுதேசிய வைத்தியக்கல்லூரி என்றிருந்ததை இரவோடிரவாக ஸ்ரீலங்கா ஆயுள்வேதக் கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்துவிட்டார்கள். டி. ஐ. எம். பதவி டி. ஏ. எம். பதவியாக மாற்றப்பட்டது.

ஸ்ரீலங்கா ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனமும், சித்தவைத்திய ஒழிப்பில் தனது பங்கைத் தவறாது செய்து வருகிறது.

சித்த மருந்துகள் சாட்டுக்கு ஒன்றிரண்டு தயாராகிறது. மிகுதி முழுதும் ஆயுள்வேத மருந்துகளே.

கைதடி சுத்த தமிழ்ப்பகுதியில் இருந்தும் அதன் பெரும்பாலான ஊழியர்கள், சிற்றூழியர்கள் உட்பட — தென் இலங்கையில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறார்கள். உள் நிர்வாகம் கூடச் சிங்களத்தில் நடைபெறுகிறது.

தென் இலங்கையில் உள்ள எந்தவொரு ஆயுள்வேத வைத்தியசாலையிலேனும் மருந்துக்காகவாவது தமிழ் ஊழியர்கள் கடமையில் அமர்த்தப் பட்டிருக்கிறார்களா? அங்கு தமிழில் ஒரு எழுத்துத்தானும் எழுதப்படுகிறதா? என்று கேட்க விரும்புகிறோம்.

## சாதிபேத மின்றிச் சமபந்தி போசனம்!

சனவரி 10 — தமிழ்த் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் யாழ் முற்றவெளியில் அன்னதானம் நடைபெற்றது. இந்த அன்னதானத்தின் போது தமிழர் கூட்டணித் தலைவர்கள் அனைவரும் சாதிபேதமின்றி — பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றபேதமின்றி அனைவருடனும் நிலத்திலமர்ந்து உணவருந்திய காட்சி மலரும் தமிழீழத்தில் சாதிவெறிசகு துளியும் இடமிருக்காதென்பதை எடுத்துக்காட்டுவதாயமைந்திருந்தது.

சுடர்

## பொங்கல் இதழ் இப்போது விற்பனையாகிறது

## விலை ரூபா ஒன்று

## எங்கும் கிடைக்கும்

## அரசிடம் தக...

—1-ம் பக்கத் தொடர்

சோரியுள்ளதாகத் தெரிகிறது. வண்ணை ஆனந்தனைப்பற்றி இந்த நிறுவனம் தனது பிரசார ஏட்டில் குறிப்பிட்டிருந்தது சுதந்திரன் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

மூன்றாண்டு காலம் விசாரணையற்ற தொடர்ச்சியான சிறைவாசத்தின் பின்னர், 1975 தொடக்கில் வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோருட்பட 42 தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டதும், மீண்டும் 1975 ஜூலை மாத இறுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டு தொடர்ந்து சிறைவைக்கப் பட்டிருப்பதும் அனைவரும் அறிந்ததே.

அதே வேளையில், திரு. பொ. சத்தியசீலன், அமரசிங்கம், ஞானசேகரன், நடேசானந்தம், திசைவீரசிங்கம் ஆகிய ஐந்து இளைஞர்கள், 1972, 1973ம் ஆண்டிலிருந்து விடுதலையேயின்றி தொடர்ந்து சிறைவைக்கப்பட்டிருப்பதும் இங்கு சுட்டிக் காட்டத் தக்கது.

## பொலிசாரின்.....

—1-ம் பக்கத் தொடர்

அனுமதித்தனர். இதன் பின்னர் மௌன ஊர்வலம் நகர்ந்து சென்று முற்றவெளியை அடைந்தவுடன் இன எழுச்சி முழக்கங்களுடன் தியாகிகள் சமாதியையடைந்ததும் அங்கு மலர் தூவி அஞ்சலிசெலுத்தினர்.

மாலையில் யாழ். மத்திய கல்லூரியில் தமிழர் கூட்டணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அஞ்சலிக் கூட்டத்திற்கு கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா தலைமை வகித்தார். வடக்கு, கிழக்கு மாகாணக் கூட்டணி பா. உ.க்களும். பிரமுகர்களும் உரை நிகழ்த்தினர்.

## தமிழ் ஈழ தேசி..

—8-ம் பக்கத் தொடர்

தனிநாட்டுக் கோரிக்கையை தேசிய பேரவையில் சமர்ப்பிக்கின்றோம். அந்த நாள் தமிழனின் சுதந்திர நாள். அன்றையத்தினம் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி, உதயசூரியன் கொடியைப் பறக்கவிட்டு, தமிழ் ஈழத் தேசிய கீதத்தை இசைக்க வேண்டுமென்றும், சுதந்திரப் போராட்டத்தில் குதிக்கத் திடசங்கற்பம் செய்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து பேசிய உடுவில் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம், இலங்கையில் ஆகஸ்ட் மாதம் நடைபெற இருக்கும் கூட்டுச்சேரா மகாநாட்டில் தனிநாட்டுக் கோரிக்கை பற்றி மகாநாட்டில் கலந்துகொள்ளும் அகில உலகப் பிரதிநிதிகளிடம் விளக்கமளிக்க இருப்பதாகவும், தந்தை செல்வா காட்டிய அகிம்சை வழியில் போர் தொடுப்பதென்றும், அதற்குத் தமிழ் இளைஞர் பேரவையினர் உறுதுணையாக நின்று செயலாற்ற வேண்டுமென்றும் கூறினார்.

வீரத்தாய் வழித்தோன்றிய இலட்சிய அம்மை, இசைத்தென்றல், மகளிர் பேரவைச் செயலாளர் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் போது, சகல தமிழ்ப் பெண்களும் ஒன்று சேர்ந்து மகளிர் பேரவையை அமைத்து விடுதலைக்கு வித்திட வேண்டுமென்றும், இங்கு துடிப்புள்ள இளைஞர்களும் மகளிர்களும், பெரியோர்களும் பெருந்திரளாகத் திரண்டிருப்பதைக் காணும்போது நிட்சயம் நாங்கள் தமிழ் ஈழம் அமைத்தே தீருவோம் என்பது புலனாகின்றது என்றும் கூறினார்.

அத்துடன் காசியின் விடுதலை வேட்கை நிறைந்த பாடலையும் உணர்ச்சி ததும்பப் பாடினார்.

இதைத் தொடர்ந்து தமிழ் இளைஞர் பேரவைக் கிளைச் செயல் வீரர்களைத் தெரிவு செய்யும் நிகழ்ச்சி செயலாளர் நாயகம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர். செல்வன் ம. பரமேஸ்பரன், (புரட்சி) உபதலைவர் செல்வன் த. கோணேஸ்பரன், செயலாளர் செல்வன் ச. சாம்பசிவம். (எழில் வண்ணன்) உபசெயலாளர் செல்வன் க. பரமேஸ்பரன், பொருளாளர் க. நாராயண பிள்ளை. நிர்வாக உறுப்பினர்களாக செல்வன் சு. சௌந்தரராசா, செல்வன் க. கோபாலரத்தினம், செல்வன். வீ. நேசதுரை, செல்வன் க. சுந்தரமூர்த்தி, செல்வன் க. வேலாயுத [illegible] நேசதுரை, செல்வன் கி. தியாகராசா, செல்வன் க. சுப்பிரமணியம்.

இதைத் தொடர்ந்து மகளிர் பேரவை தெரிவு செய்யப்பட்டது.

செல்வன் ம. பரமேஸ்பரன் தமது தலைமையுரையில், இக்கட்டான நிலையில் என்னைத் தலைவராகத் தெரிவு செய்தமைக்காக உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், எல்லாத் துடிப்புள்ள தமிழ் இளைஞர்களும் தமிழ் ஈழம் என்ற ஒரே குறிக்கோளின் கீழ் இயங்கி, செயல்படவேண்டுமென்றுப் கேட்டுக்கொண்டார். இக்கிளைத் திறப்பு விழாவிற்குச் சிறப்புடன் வருகைதந்த கூட்டணிப் பிரமுகர்கள் திரு. அம்பலவாணர், திரு. பூ. கணேசலிங்கம் ஆகியோரும் மட்டக்களப்புத் தமிழ் இளைஞர் பேரவையினரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

## வள்ளுவப் பெருவிழா

இலங்கை அறிவு இயக்கம் வான்புகழ் வள்ளுவரைப் போற்றித் துதிக்கவும்—வள்ளுவத்தைப் பொதுமக்களுக்கு அறிமுகம் செய்யும் பொருட்டும் மார்ச் மாதம் பிற்பகுதியில் வடகொழும்பில் பெருவிழா எடுக்கவிருக்கிறது.

தமிழ்ப் பெருங்குடி மக்களின் பேராதரவில் மலரும் இப் பெருவிழா, தலைநகரம் என்றும் காணாத தலை சிறந்த நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக இருக்கும். ஈழம் வாழ் பிரபல தமிழ் அறிஞர்களும், கலைஞர்களும் கலந்து சிறப்பிப்பதாக இருக்கும்.

இப் பெருவிழா தொடர்பாக கொழும்பு கல்வி மாவட்ட மாணவருக்கும், மற்றையவர்களுக்கும் பல போட்டிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

தரமான சிறப்பு மலரொன்றும் தயாராகின்றது.

வேல் அமுதலிங்கம்.


### பொங்கல் வாழ்த்துக்கள்

அனைவருக்கும் எமது உளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக. 15 மில்க்வைற் நீல சோப் அல்லது, 2 பார் சோப் அல்லது. 2 நீம் வாசனை சோப் மேலுறைகளை அனுப்பி அழகிய காந்தி மேசைக்கலண்டர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிச் சோசலிசம் பேசும் கூட்டணியே!

# போதும் நிறுத்து உன் நீலிக் கண்ணீரை

இன்றைய ஸ்ரீலங்கா—மொஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டரசாங்கம் தங்களை சோசலிச வாதிகளென்றும், தமிழர் கூட்டணியை பிற்போக்குக் கட்சியென்றும் பிதற்றுகின்றது ஆனால் இலங்கையின் இன்றைய அரசு ஒரு பிற்போக்கு அரசு என்று கம்யூனிஸ்ட்டுகளின் கண் கண்ட தெய்வம் கார்ல் மாக்ஸ்சின் கருத்துக்கள் கூறுகின்றன.

இன்றைய அரசு எடுத்த நடவடிக்கைகளில் சில சோலிச நடவடிக்கைகள் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இந்தச் சில சோசலிச நடவடிக்கைகள் மட்டும் இந்த நாட்டை ஒரு சோசலிச நாடு என்று சொல்லுமளவுக்கோ இந்த அரசைச் சோசலிச அரசு என்று சொல்லுமளவுக்கோ இல்லை என்பதே சோசலிசம் பற்றித் தெரிந்தவர்களின் கருத்தும், கார்ல் மாக்ஸ்சின் நூல்களிலுள்ள கருத்து மாகும். அது மட்டுமல்ல இந்த அரசின் சோசலிச நடவடிக்கைகளைவிட அதன் சோசலிச எதிர்ப்பு நடவடிக்கைகளே அனேகமெனலாம்.

சோசலிசவாதிகள் என்ற போர்வையின் கீழ் வேண்டா வெறுப்பாக இவர்கள் எடுத்த சில சோசலிச நடவடிக்கைகள் சோசலிசத்தின் மேலுள்ள விருப்பினால் எடுத்த நடவடிக்கைகளல்ல. அடக்கப்பட்டு, ஒடுக்கப் பட்டு வரும் பாட்டாளி மக்கள் படிப்படியாக அரசியல் அறிவுபெற்று தங்கள் கட்சிகளை ஒதுக்கிவிடுவார்கள் அல்லது தங்கள் சொத்துக்கள், செல்வாக்குகள், குலப் பெருமைகள் இவற்றையெல்லாம் அழித்தொழித்துவிடும் புரட்சியில் இறங்கிவிடுவார்கள் என்ற காரணத்தினாலேயே எனலாம். விருப்பமின்றி இவர்கள் எடுத்த சோசலிச நடவடிக்கைகளுக்காகத் தங்களைத் தாங்களே சோசலிசவாதிகளென்று மண்டூகம் போல வாய் வெடிக்கக் கத்தும் இவர்களுக்கு கார்ல் மாக்ஸ்சின் சிந்தனைகள் என்ற பகுதியிலிருந்து ஒரு வசனத்தைச் சமர்ப்பிக்கின்றேன். 'ஒருவன் தன்னைப்பற்றி என்ன நினைக்கின்றான் என்பதைக் கொண்டு நாம் அவனை மதிக்கமாட்டோம்.' என்பதே அது.

இலங்கையின் இன்றைய ஆளும் கூட்டணியின் பிரதமரும், அமைச்சர்களும் பாராளுமன்றப் பிரதிநிதிகளும் பெரும் தனவந்தர்களாகவும், தோட்ட முதலாளிகளாகவும், இருப்பதைக் காணலாம். உண்மையான சமதர்மம் மலருவதை இவர்கள் ஒருபோதுமே விரும்பமாட்டார்கள். முதலாளி வர்க்கத்தையும். மத்தியதர வர்க்கத்தையும் சேர்ந்த இவர்களின் நடவடிக்கைபற்றிக் குறிப்பிடும்போது "மத்தியதரவர்க்கமாக இருக்கும் தங்கள் நிலமையிலிருந்து இறங்கிவிடாமல் இருப்பதற்காகத்தான் அவர்கள் போராடுகின்றார்கள். உண்மையில் அவர்கள் புரட்சிகரமானவர்களல்ல. அவர்கள் மாறுதல்களை விரும்பாதவர்கள். பிற்போக்கானவர்கள் என்று கூடச் சொல்லலாம். அவர்கள் சரித்திர ஓட்டத்தைத் தடுத்துநிறுத்த விரும்புபவர்கள்.' எனத் தனது வர்க்கப் போராட்டம் என்னும் பகுதியிற் கார்ல் மார்க்ஸ் குறிப்பிடுகின்றார்.

மேலும் இவர்களைப் பற்றி பிற்போக்குச் சோசலிசம், நிலப்பிரபுத்துவம் என்னும் பகுதியிற் குறிப்பிடும்போது "முதலாளித்துவத்தால் வீழ்த்தப்பட்டு வேறு எவ்வகையிலும் தங்கள் வயிற்றெரிச்சலைக் காட்டிக்கொள்ளாமல் சில சமயங்களில் சோசலிசம் பேசக் கிளம்பிவிடுகிறார்கள். அடிப்படையில் இவர்கள் கருத்து என்ன வென்று பார்த்தால் புரட்சிகரமான தொழிலாளி வர்க்கம் ஏற்படாமல் தடுப்பது தான்" என்று எழுதியிருக்கிறார்.

புதிய நிதியமைச்சரின் வரவு செலவுத்திட்டப் பேச்சுக்கள் முதலாளித்துவத்திற்கு முண்டு கொடுக்கும் வகையிலும் தொழிலாளி வர்க்கத்தைச் சமாதானப் படுத்தும் வகையிலும் இருப்பதைக் காணலாம். முதலாளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்திப் பிரச்சினைகளைத் தீர்க்கலாமென அவர் நினைக்கிறார். இதே அரசாங்கத்தின் மந்திரி சபையில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட்டுக்கள் கார்ல் மார்க்ஸ்சின் 150வது பிறந்த நாள் வெளியீடான கார்ல மார்க்ஸ் என்னும் நூலில் "புரட்சிகர வர்க்கப் போராட்டத்திற்கு மாறாக முதலாளி வர்க்கத்திற்கும் தொழிலாளிவர்க்கத்திற்கு மிடையில் வர்க்க ஒத்துழைப்புச் செய்யும் சந்தர்ப்பவாதத்தை மார்க்சும், ஏங்கல்சும் உறுதியாக நிராகரித்தனர்'' எனக் குறிப்பிட்டுள்ளது.

இரு வர்க்கத்திற்கும் ஒத்துழைப்புப் பிரசாரம் செய்யும் நிதியமைச்சர் அங்கம் வகிக்கும் இன்றைய அரசாங்கம் தம்மைச் சோசலிச வாதிகள் என்று கூறுவது ஓநாய்கள் தங்களை ஆடுகளின் பாதுகாவலன் என்று கூறுவதை ஒக்கும்.

இன்றைய அரசு தொழிலாளர் நலன்பேணும் பாட்டாளிகளின் அரசாக இருந்தால் மார்க்சின் கொள்கைப் படி சமூகமானது சக்திக்குத் தகுந்த உழைப்பு, உழைப்புக்குத் தகுந்த ஊதியம் என்ற நிலைக்கு வளாச்சியடைய என்ன செய்தார்கள். "உயிரோடு உடலை வைத்திருக்கத் தகுந்த ஊதியம தான் தொழிலாளி பெறுகின்றான்" என மார்க்ஸ் பரிதாபப்பட்டார். ஆனால் இலங்கையில் உயிரோடு உடலை வைத்திருக்கும் அளவு ஊதியம் தானும் மலையகப் பாட்டாளி வர்க்கத்திற்குக் கிடைக்கவில்லை. அது ஏன்? அவர்களைப் பட்டினிச் சாவு போடும் இன்றைய் அரசு முற்போக்குச் சோசலிசம் பேசுவது விந்தையானது.

பாட்டாளி வர்க்கத்தின் அரசு என்று கூறும் இந்த அரசு தான் பொறுப்பேற்ற தோட்டங்களிலிருந்து தொழிலாளரைப் பலாத்காரமாக வெளியேற்றும் விதியை அவசரகாலச் சட்டத்தின் கீழ்ப் பெற்று. அதற்காக அவர்கள் நீதிமன்றம் செல்லும் உரிமையையும் பறித்து, தொழிலாளரின் தொழிற்சங்க உரிமையிலும் கைவைத்த இந்த அரசு தம்மைத் தொழிலாளி வர்க்கத்தின் அரசு என்று கூறிக்கொள்வது. அற்பமும் பொருந்தாது.

வருமானம் அதிகரிக்க அதிகரிக்க, வரியும் அதிகரிக்கும் அடிப்படையிலே வரி இருப்பதைக் கார்ல் மார்க்ஸ் வற்புறுத்தினல் பீலிக்ஸ் மகளிர் ஆண்டைச் சாட்டி சிலருக்கு வருமான வரியை ரத்துச்செய்யும் நடவடிக்கையில் இறங்கிவிட்டார். கம்யூனிஸ்ட்கட்சியும் கைகட்டி வாய்பொத்தி இதை ஏற்றுக்கொண்டு விட்டது.

இந்த அரசு தம்மைச் சோசலிசவாதிகள் என்றும். தமிழர் கூட்டணியைப் பிற்போக்கு வாதிகள் என்றும் பிதற்றுகிறது. இந்த அரசு சோசலிச அரசா? முற்போக்கு அரசா? வகுப்புவாத அரசா? வயிற்றுப் போக்கு அரசா? என்பதெல்லாம் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். பருந்திலி

**கனக தவராசன்**

ருந்து தப்பக்கோழிக்குஞ்சுக்குச் சாயம் பூசுவதுபோல, பாட்டாளி மக்களிடமிருந்து தப்ப சோசலிச சாயம் பூசிக கொண்டு சோசலிசம் பேசும் இவர்களின் சாயம் வெளுப்பதை தமிழ் மக்கள் நாளும கண்டு வருகின்றார்கள்.

---

# சரித்திரம் சந்தித்த துரோகிகள்

கடந்தகால சரித்திர வரலாற்று ஏடுகளையேனும், சமீபத்தில் நடந்துமுடிந்த விடுதலை இயக்கங்களின் வீறுமிக்க, ரத்தக்கறை படிந்த காவியங்களையேனும் சிறிது புரட்டிப் பார்ப்போமானால். நன்றி கொன்ற நயவஞ்சகர்களையும், கூடவே இருந்து குழிபறித்த கோமான்களையும், விடுதலைக்களத்திலே வெஞ்சமர் புரிந்த வீரச் செம்மல்களைக் காட்டிக் கொடுத்த கயவர்களையும், சுயநலத்திற்காகச் சொந்த இனத்தையே சூறையாடிய சூழ்ச்சிக் காரர்களையும், சரித்திரம் சற்றுத் தாராளமாகவே சந்தித்திருக்கும் விந்தையை உணரலாம். வளரும் கிளர்ச்சியின் விளைவாக எழுச்சிபெறத் துடிக்கும். இளம் புரட்சியாளர்கள் எங்கெல்லாம் மறுமலர்ச்சி காணக் குமுறி எழுகின்றனரோ, அங்கெல்லாம் கூடவே, காட்டிக்கொடுத்து வயிறு வளர்க்கும் ஈனப் பிறவிகளின் கூட்டமும் கூடி வளர்வதை சரித்திரம் நமக்குப் புகட்டுகின்றது.

ஆறாயிரம் மைல்களுக்கப் பால் இருந்து சோப்பும் சீப்பும் விற்க வந்து, ஈற்றில் பாரததேசத்தையே தம் ஆட்சியின் நிலைக்களனாக்கி, வெள்ளையர்களின் வேட்டைக் காடாக மாற்றியமைத்த ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை வேரோடு களைந்துதெறியக் கிளர்ந்தெழுந்த பாரத புத்திரர்கள் எத்தனையோ ஆயிரம் பேர் விடுதலை வேள்விதனில் தம் உயிரையே தியாகத் தீயாக எரிந்தவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்கா. கண்ணீரும், செந்நீரும் சிந்தி, சிறைக்கூடங்களைத் தம் பலிபீடமாக்கி, கல்லறையைநோக்கி யாத்திரை சென்ற காளையர்களின் தொகையோ கணக்கிலடங்கா.

இந்நிலையிலும் கூட வெந்ததைத் தின்று, வாயில் வந்ததைப் பேசும் வீணர்களின் கூட்டம் தம் கைவந்த கலையான காட்டிக்கொடுக்கும் படலத்தைக் கச்சிதமாக நிறைவேற்றத் தயங்கவில்லை. பரிசாக பதவிகளையும், பட்டங்களையும் பெற்று மகிழ்ந்தனர். தென்னக விடுதலைப் போரிலே பல விழுப் புண்களைத் தன்னகத்தே ஏற்று, கயத்தாற்றுப் புளிய மரத்திலே தன் கடைசி மூச்சையும் காணிக்கையாக்கிய கட்டப்பொம்மனைக் காட்டிக்கொடுப்பதின் மூலம் இன்றைய இனத்துரோகிகளுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கும் பெருமையை எட்டப்பன் பெற்ற விதம் எமக்குப் புரியாத தொன்றல்ல. ஈழத்து வரலாற்றிலே கழுத்தறுப்புப் [illegible] செய்து முடித்த [illegible] வன்னியனின் பரம்பரைத் துரோகிகள், தமிழ் ஈழம் காணத் துடி துடிக்கும் தனயர்களின் உயிரோடு விளையாடும் விபரீதத்தைத் தற்காலச் சரித்திரம் நமக்குத் தெளிவுறத் தெரிவிக்கிறது.

அயர்லாந்து விடுதலைப் போராட்டத்தை அடியோடு சிதைத் தொழிக்கும் நோக்குடன் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில், இறுமாப்புடன் கையுயர்த்தி தம் அடிமை மனப்பான்மையை வெளிப் படுத்தி, அகமகிழ்ந்து அயர்லாந்து திரும்பும் வேளையிலே புகையிரத நிலையங்களிலேயே சுட்டுப் பொசுக்கப் பட்டவரலாறு ஐரிஷ் நமக்குத்தரும் பாடமாகும்.

பத்துலட்சம் மக்களைப் பலி கொடுத்து, இரண்டுலட்சம் மங்கையர்களின் மானம் பறிக்கப்பட்டு, மனிதகுலமே சமீபத்தில் கண்டுப், கேட்டுமிராத அளவுக்கு இன்னல்கள் பல விளைந்த போதும், தன்னந்தனியனாக நின்று போராடிய வங்காள தேசம் ஈன்றெடுத்த தங்கம் நிகர் சிங்கங்களைக் காட்டிக் கொடுத்து தம் வெறியைத் தணித்துக்கொண்ட வங்காளிகளும், அங்கு இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் அவர்களின் முடிவு வேறு விதமாக அமைந்திருந்தது, வங்கச்சிங்கம் முஜிபுர் ரகுமானின் தலைமையில் சுதந்திர வங்காள தேசம் பிரகடனம் செய்யப்பட்டபின்ப சுதந்திரக்கொடி பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருக்கையிலே, பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆரவார ஊர்வலத்தின் நடுவே, பிறந்த பொன்னாட்டைக் காட்டிக்கொடுத்த பேடிகளை நிறுத்தி துப்பாக்கியால் சுட்

—8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் சிங்களவனுக்கு ஒரு நீதி!

# ஆளப்படும் தமிழனுக்கு ஒரு(அ)நீதி!

## நீதிமன்ற மொழிப் பிரச்சினையில் பாரபட்சம் அம்பலமாகிறது

**சட்டத்தரணி செ. வே. விவேகானந்தன்**

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யின் வழக்குகளின் சிங்கள மொழிபெயர்ப்பே உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்னே விந்தை? நீதியின் முறைமை? வடக்கு கிழக்கு மாகாணங்களின் நீதிமன்றங்களின் பதிவேடுகள் தமிழில் வைக்கப்படவேண்டும், ஆனல் சிங்கள மொழிபெயர்ப்பே உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவேண்டும். அந்த சிங்கள மொழி பெயர்ப்பின் மூலம்தான் தமிழனின் புக் கொடுப்பர்? எழுத்து மூலமுள்ள விண்ணப்பங்களை நன்ருக அறிந்தாலொழிய வாயால் எப்படிப் பேச முடியும்?

வடக்குக் கிழக்கில் வாழுகின்ற சிங்கள மகனெருவன் அரசியலமைப்பின்படியும், நீதிமன்ற விசேட மொழிச்சட்டத்தின் படியும், தனது வழக்குரைகள் விண்ணப்பங்கள், பிரேரணைகள், மனுக்கள் என்பனவற்றைச் சிங்களத்தில் சமர்ப்பிக்கமுடியும். அத்தோடு, அந்நடவடிக்கைகளில் சிங்களத்தில் பங்கு கொள்ளவும் முடியும். இப்படியான உரிமை வடக்குக் மேன்முறையீடுகளை தீர்மானிக்கப்படும்.

இவ் அவமானம் ஒருபுறம் இருக்க, வடக்கு, கிழக்கு மாகாணங்களைத்தவிர மற்றைய ஏழு மாகாணங்களிலும் வசிக்கும் தமிழர்களின் நீதிமன்ற மொழியுரிமையென்ன தெரியுமா? நீதிமன்ற நடவடிக்கைகளில் மட்டும் தமிழில் பங்கு கொள்ளலாம், அவ்வளவே, வாயால் பேசும் உரிமை மட்டுந்தான். வேருென்றுமில்லை.

"நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கு கொள்ளுதல்" எனும் சொற்ருெடரின் கருத்தினை விளங்குவதற்கு உட்பிரிவு மூன்றை மிகக் கவனமாக ஆராய வேண்டும். இப்பிரிவின்படி வழக்குரைகள், விண்ணப்பங்கள், பிரேரணைகள், மனுக்கள் என்பனவற்றை எழுத்துமூலம் தமிழில் சமர்ப்பிக்கமுடியாது. வாயால் மட்டுமே பேசலாம். வாயப் பேச்சிற்கு யார்தான் மதிப் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த மற்றைய ஏழு மாகாணங்களில் வாழும் தமிழருக்குண்டா? இல்லவேயில்லை. தமிழனின் உரிமை இந்நிலையிலிருந்துகூட, நீதி அமைச்சர் இன்னும் குடைய முனைகிருர். அப்படிக் குடைந்தபின், சிங்கள நீதிமன்ற எல்லைக்குள் வாழும் தமிழ் மகனெருவன் "வாயால் மட்டும் பேசமுடியுமே" யொழிய தனது மனுக்களைத் தமிழில் கொடுக்கமுடியாது!

3 (b) of the Language of the Courts (Special Provisions) Law No. 14 of 1973.

that parties, applicants and persons legally entitled to represent such parties or applicants may:-

(i) submit their pleadings, applications, motions, and petitions in Sinhala, and

(ii) participate in the proceeding in Sinhala

Provided, however, that in all such cases a Tamil translation shall be caused to be made for the purposes of the record; and

(c) that, in the event of an appeal from such court, Tribunal institution or Board other than a Rural Court, a record in Sinhala shall be prepared for the use of the court hearing such appeal.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைத்தவிர்ந்த மற்றைய ஏழு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களின் நடவடிக்கைகளில் தமிழில் "பங்குபற்றும்" உரிமை இருந்த பொழுதிலும், வழக்காடும் ஒரு தமிழன் ஒரு சிங்கள வழக்கறிஞரைத் தனது வழக்கை நடத்த நியமிப்பராயின் அவர் தனது மொழியான தமிழில் "பங்குபற்று"கின்ற உரிமையையும் இழக்க நேரிடும். ஏனெனில் வழக்கறிஞர் தனது தாய் மொழியில் நடாத்தும் உரிமையைப் பெறுகின்ருர். அரசியலமைப்பின் 11 ஆம் பிரிவின் 5 ஆம் உட்பிரிவு பின்வருமாறு கூறுகின்றது:-

கட்சிக்காரர் அல்லது விண்ணப்பகாரர் ஒருவரைப் பிரதிநிதித்துவம் வகிக்கச் சட்டப்படி உரிமை கொண்டுள்ள ஆள் ஒருவர் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட எதுவேனும் நீதிமன்றம், நியாய சபை அல்லது வேறு நிறுவனத்தில் எடுபடும் நடவடிக்கைகளில் சிங்களத்தில் அல்லது தமிழில் பங்கு கொள்ளலாம் என்பதுடன் அந்நோக்கத்துக்கென அரசிஞல் ஏற்பாடு செய்யப்படும் சிங்களத்தில் அல்லது தமிழிலான பேச்சுமொழிபெயர்ப்புக்கு உரிமையுடையவராதலும் வேண்டும்.

A person legally entitled to represent a party or an applicant may participate in the proceedings in any court tribunal or other institution referred to in subsection (1) or subsection (2) of this section, in Sinhala or Tamil, and shall be entitled for that purpose, to interpretation, in Sinhala or Tamil provided by the State.

இவ்வளவுகாலமும் சிந்திக்க மறுத்த தமிழனே! இனிமேலாவது சிந்திப்பாயாக. சலுகைகளை விரும்பிய தமிழனே! தனிப்பட்ட உதவிகளை வேண்டிநின்ற தமிழனே! இனிமேலாகுதல் தன்னலத்தைத்துறந்து, தமிழர் சமுதாயத்திற்காகப் பாடுபடத் திடசங்கற்பம் கொள்ளவேண்டும். அன்றேல் குடைவது மட்டுமன்றி கடைந்தும் எடுக்கப்பட்டுவிடுவோம்.

— வளரும்

---

# இலண்டனில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

## தமிழ் ஈழத்தின் விடுதலைத் தீ உலகத்தில் பற்றி எரிகிறது!

தமிழ் ஈழத்தவர்களின் தாயகத்தை ஆக்கிரமிப்பாளர்களாகிய சிங்கள ஏகாதிபத்தியத்தினரிடம் இருந்து மீட்கும் குரல் ஸ்ரீ லங்காப் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் விடுதலை வேட்கையாக, 1976-ம் ஆண்டு மாசி மாதம் 4ம் திகதி உலகில்முன் பறைசாற்றப்படுகிறது. பல விடுதலை இயக்கங்களின் பிறப்பிடமான இலண்டனில் இருந்து, உலக நாடுகளுக்கும் உலகப் பொதுஸ்தாபனங்களுக்கும் இதைத் தெரியப்படுத்தும் மாபெரும் பொறுப்பை ஈழ விடுதலை முன்னணி ஏற்றுள்ளது. ஈழ விடுதலை முன்னணி தைமாதம் 31ம் திகதி இலண்டனில் நடாத்தும், மாபெரும் ஊர்வலத்தின் மூலம், தமிழர்களின் எண்ணங்கள் உலக மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.

இதைப் பலப்படுத்துவதற்கு இங்கிலாந்தில் வாழும் ஆண், பெண், குழந்தைகள் யாவரும் அழைக்கப்படுவது மட்டுமல்ல, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் உள்ள தமிழர்கள் யாவரும் எதிர்பார்க்கப்படுகிருர்கள். இவர்களை எல்லாம் இதில் பங்கு கொள்ளும்படி தூண்டுவதற்கு ஈழத்தில் வாழும் அன்னை, தந்தையர், சகோதரங்கள், உற்ருர், உறவினர், நண்பர்கள், நேரடியாகக் கடிதங்கள் எழுதி வேண்டுகோள் விடுக்கவேண்டுமென, ஈழ விடுதலை முன்னணி இவ்விளம்பரத்தின் மூலம் வேண்டுகோள் விடுக்கின்றது!

வெளிநாடுகளில் இருந்து இதில் பங்குபற்றுவதற்கு இங்கிலாந்திற்கு வருபவர்கள், கீழ்க்கண்ட விலாசத்துடன் காலதாமதமின்றித் தொடர்பு கொண்டால், தங்குவதற்குரிய வசதிகள் ஒழுங்கு செய்யப்படுமென ஈழ விடுதலை முன்னணி உறுதியளிக்கின்றது.

*Treasurer,*

**Ealam Liberation Front,**
**10, Harefields,**
**OXFORD.**
**U.K.**

---

**பிலிப்பைன்ஸ்.**

—2-ம் பக்கத் தொடர்

உண்டு. இனியவளே...! ஏன் வருந்துகிளுய்? நான் விட்டுச செல்லும் பணியைச் செய்யவேண்டியது உன் கடமை அல்லவா...? துணிந்து நில்!

வாழ்க எம் தாய் நாடு! ம் அதிகாரிகளே!!! இனி. உங்கள் நாடகம் ஆரம்பமாகட்டும்"

இடி முழங்கி ஓய்ந்தது போல் இருந்தது அவன் பேச்சு. பேச்சின் உக்கிரம் மக்களின் நரம்பை முறுக்கேற்றியது! உடலெங்கும் சுதந்திர வெறி வேகமாகப் பாய்ந்தது!!

"ம்... சுடு..." என்ருன் ஒரு அதிகாரி துப்பாக்கியிலிந்து குண்டுகள் பாய்ந்தன. ரிசாலின் உடலால் சுதந்திர இரத்தம் மட்டும் பாயவில்லை. சூட்டுத் துவாரத்தின் வழியாக அவன் விடுதலை வெறி கொண்ட உயிரும் புறப்பட்டு 'பிலிப்பைன்ஸின் விடுதலை விரும்பிகள் அனைவர் உடலிலும் நிறைந்தது.

அவன் பிணம் 'பகோ' என்ற கல்லறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது இத்துணை விடுதலை வெறி அவனிடம் ஏன் இருந்தது?

—அடுத்த இதழில் முடியும்

---

## உடுப்பிட்டியில்

### தமிழர் கூட்டணிக் கிளை!

உடுப்பிட்டித் தொகுதியின் தமிழர் கூட்டணிக் கிளையும், கரவெட்டிக் கிளையும் சென்ற வாரம் நிறுவப்பட்டுள்ளது. இதையொட்டி கரவெட்டியில் திரு. க. ஜெயக்கொடி பா. உ. தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திருவாளர்கள் சி கதிரவேற்பிள்ளை, உடுப்பிட்டி சிவா, அ. அமிர்தலிங்கம், ஈழவேந்தன், இரகுபதி பாலசிறீதரன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ஈழ தேசிய கீதத்துடன் உதயசூரியன் கொடி எங்கும் பறக்கட்டும்!



## குருக்கள் மடத்தில் ஜெயக்கொடி பேச்சு!

பட்டிருப்புத் தொகுதியின் நுழைவாயில், என்றுவர்ணிக்கப்படுவதும், தன்மானத், தமிழர்களின், கோட்டையெனப் பேர் பெற்றதுமான குருக்கள் மடத்தில், 7-1-76ல் பட்டிருப்புத் தொகுதியின் முதலாவது தமிழ் இளைஞர் பேரவைக் கிளை, தானைத்தளபதி நாவலர் அமிர்தலிங்கம் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தமிழர் கூட்டணிக்குத் தமிழ் இளைஞர் பேரவை வலது கரமென்றும், மகளிர் பேரவை இருதய மென்றும், தமிழ் இளைஞர்கள் ஒன்று பட்டு தமிழர் கூட்டணியினர் இடும் கட்டளைகளைச் சாத்வீக முறையில் நிறைவேற்ற முன்வர வேண்டுமென்றும் தமதுரையில் நாவலர் கேட்டுக்கொண்டார்.

அதைத் தொடர்ந்து பேசிய உடுப்பிட்டி தேசிய பேரவை உறுப்பினர் திரு. ஜெயக்கொடி அவர்கள் தமதுரையில் 'வருகின்ற மாசி மாதம் 4ம் திகதி

—5-ம் பக்கம் பார்க்க

## சரித்திரம் சந்...

—6-ம் பக்கத் தொடர்

டுப் படுகொலை செய்த வங்க விடுதலை வீரர்களின் நியாயமான ஆத்திரத்தை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

முப்பது வருடங்கட்கு மேலாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தினுல் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த வீரம் நிறைந்த வியட்நாமிய மக்களின் எழுச்சிக்குரல் கேட்டு, இதயம் நடுங்கக் கதிகலங்கி இரவோடு இரவாக அமெரிக்க விமானங்களிலே ஏறி எல்லையைக் கடந்த வியட்நாமிய துரோகிகளின் நிலை கண்டு உலகமே கைகொட்டிச் சிரித்தது.

இருபதுக்கு மேற்பட்ட அரபுநாடுகளின் மத்தியிலே தன்னந்தனியனாக நின்று வாழ்வதா? இன்றேல் வீழ்வதா என்ற நிலையில் ஜீவமரணப் போராட்டம் நடத்தி வரும் சின்னஞ்சிறு இஸ்ரவேலின் வரலாறும், வீரமும் உலகளாவிய ஒன்று. [illegible]லை பெயர்ந்து விழுந்தாலும், நிலைகலங்காத அந்த மக்களின் மத்தியிலும் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் துரோகிகள் இருக்கத்தான் செய்தார்கள். 1973-ம் ஆண்டு ஜனவரி மாதம் அரபுநாடுகளில் ஒன்ருன சிரியாவுக்கு இராணுவ இரகசியங்களைக் கையளிக்க முயன்றமைக்காக ஆறுக்கு மேற்பட்ட இஸ்ரேலிய யூதர்கள் கைது செய்யப்பட்ட பொழுது, அரபுகளின் அடுத்தடுத்த படையெடுப்புகளுக்கே அஞ்சாத யூத மக்களின் நெஞ்சம், இந்நிகழ்ச்சி கண்டு அதிர்ச்சியடைந்தது.

சுருங்கக்கூறின் துரோகிகளைச் சந்திக்காத விடுதலை இயக்கங்களை உலக அரசியலின் வரலாற்றில் எந்தக் கட்டத்திலுமே பார்க்க முடியாது. இது வரலாறு காட்டும் மறுக்க முடியாத உண்மை. எனவே புதியதோர் தமிழகம் படைத்திட, போர்க்களம் நாடிச் செல்லும் பொங்கு தமிழ் மகனே! புல்லர்களின் நிலை கண்டு மனம் கலங்காதே!

உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணிக்கத் தயாராகக்களம் நாடிச்செல்லும் தூயவனே, உன்னைத் தொடரும் எத்தர்களின் சக்தி கண்டு நெஞ்சம் பதைக்காதே! நீ நடத்தும் ஜீவமரணப் போராட்டத்தின் நடுவே குறுக்கிடும் இந்த கோடாரிக்காம்புகளை, ஒரு புறம் ஒதுக்கி அலட்சியப்படுத்தி விட்டு, சங்கநாதம் முழங்க, சமர்க்களம் நாடிச் செல்லடா! இறுதி வெற்றி உனதே என எக்காளம் ஊதடா! வரலாறு படைத்து வழி காண்போம் என வானமதிர முழக்குவோம். எதிரிகளின் கூட்டம் நாற்புறமும் சிதறியோட, பேரிகை கொட்டுவோம். நாளை வெற்றி நமதே எனச் சங்கொலிப்போம்.

—எஸ். பெனடிக்ற்


**5-வது வெற்றி வாரம்!**

**கெப்பிட்டல்** கொழும்பு **லிடோ** யாழ்நகர்

ஜெமினி கணேசன் - பத்மினி
கே. ஆர். விஜயா, ஜெயலலிதா நடித்த-

**அன்னை வேளாங்கண்ணி** (கலர்)

**கிங்ஸ்லி** (கொழும்பு) இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கல்வியைத் தந்தவன் கடவுள்
அதை!
சொல்லிக் கொடுத்தவன்
தூய பொருள் எல்லாம் அள்ளிக் கொடுத்தவன்
அழகோடு மணம் பரப்ப அறிவுரையை வழங்குபவன்

ஜெமினி கணேசன், சௌகார் ஜானகி, நம்பியார், சோ, ஸ்ரீகாந்த், தேங்காய் சீனிவாசன் நடித்த

**ஸ்கூல் மாஸ்டர்**

**பிளாசா** 4வது வாரம்!
ஜெமினி, பத்மினி, ஜெயலலிதா, ரங்கராவ் நடித்த-

**ஆதிபராசக்தி**

**வெலிங்டன்** 2-வது வெற்றி வாரம்!
(யாழ்ப்பாணம்)
சிவகுமாரன், லக்ஷ்மி, எம். என். ராஜம், மனோரமா நடித்த-

**கண்மணி ராஜா**

4-வது வாரம் **செல்லமகால்**

கடவுள் அவதாரத்தில்தான் மனிதனுக்கு எத்தனை மகிழ்ச்சி! அவ் அவதாரங்களால் ஏற்படும் நன்மைகளையும், கடவுளின் சிறப்பையும் விளக்குகிறது!

O ஜெமினி O ஜெயலலிதா O முத்துராமன்
O ரங்கராவ் O பத்மினி O சுருளிராஜன்
O எஸ். வி. சுப்பையா O வாணிஸ்ரீ O ராஜஸ்ரீ
O சுந்தரராஜன் O ராகினி O நிர்மலா நடித்த

எல்லா மதத்தினரும் பார்க்கவேண்டிய படம்

**ஆதி பராசக்தி**
(ஈஸ்ட்மன் கலர்)

இசை ... கதை — வசனம் — டைரக்ஷன் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

**கெயிட்டி** பொங்கல் வெளியீடு
சிவகுமார், தேங்காய், செந்தாமரை, லட்சுமி,
எம். என். ராஜம், மனோரமா நடித்த-

**கண்மணி ராஜா**

**ரொக்ஸி**
நாகேஷ், ஜெமினி, ஜெய்சங்கர் நடித்த
கே. பாலசந்தரின் **பூவா தலையா**
(புத்தம் புது கொப்பி)

**றீகல்** மட்டுநகர்
தினசரி 6, 9-30, சனி - ஞாயிறு 2-30, 6, 9-30
முத்துராமன்—கே. ஆர். விஜயா—ஜெயசித்திரா
சிவகுமார்—சுந்தரராஜன் —நடித்த

**தீர்க்கசுமங்கலி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு—12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976—ம் வருடம் ஜனவரி மாதம் 18-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.